

தென்காசி வடக்கு மாவட்டம், சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் சங்கரன்கோவில் தொகுதி, பார்வையாளர் பி.எம்.ராமஜெயம் வாசுதேவநல்லூர் தொகுதி பார்வையாளர் தனுஷ் எம்.குமார் ஆகியோரது அறிமுகக் கூட்டம் மாவட்ட அவை தலைவர் பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்று உரையாற்றினார். உடன் தங்கவேலு, சீனிவாசன், பரமகுரு, டாக்டர் செண்பக விநாயகம், ராஜதுரை, மனோகரன், சரவணன், பிரகாஷ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## ஆர்.கே. நகரில் புதிய கட்டிடம் திறப்பு!

சென்னை, அக். 14–

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி மீனவ ஐக்கிய பஞ்சாயத்து சபை சார்பாக நடைபெற்ற டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழா மாளிகை திறப்பு விழா நடைபெற்றது. பா.கோதண்டன் தலைமையில் மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டிசேகர் எம்.எல்.ஏ, மாளிகை திறந்து வைத்தார்.

உடன் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, ஜட்ரீம்ஸ் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, இரா.மதிவாணன், இரா.லட்சுமணன், இரா.செந்தில்குமார், பவித்ரா நரேஷ்குமார் எம்.சி, உமா சரவணன், பானுமதி சுந்தர், ஆர்.வெற்றிவீரன், ஆர்.டி.ராஜா, எஸ்.கே.இளங்கோ மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் அருகே உள்ள கூடலூர் நகராட்சியில் ரூ.1.60 கோடியிலான வளர்ச்சி பணிகளை நீலகிரி தொகுதி எம்.பி. ஆ.ராசா தொடங்கிவைத்தார். நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்த அவருக்கு வீரபாண்டி பிரிவில் கூடலூர் நகர தி.மு.க சார்பில் வரவேற்பு கொடுக்கப்பட்டது. இதை தொடர்ந்து 15 வது வார்டு பேராசிரியர் காலனியில் ரூபாய் ஒரு கோடியே 20 லட்சம் செலவில் புதிதாக கட்டப்பட உள்ள சமுதாய கூடத்தின் பணியை தொடங்கிவைத்தார். அதன்பின் 14வது வார்டு லட்சுமி நகரில் ரூ.41 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய பூங்காவை ஆ.இராசா எம்.பி ரிப்பன் வெட்டி திறந்துவைத்தார்.நகராட்சி தலைவர் மற்றும் நகர செயலாளர் அ.அறிவரசு தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் டி ஆர் சண்முகசுந்தரம், மாவட்டம் மாணவர் அணி அமைப்பாளர் அந்தோணி ராஜ், ஆணையாளர் மனோகரன், துணை தலைவர் ரதிராஜேந்திரன்,பொறியாளர் சோமசுந்தரம், தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் சண்முகசுந்தரம், நகர்மன்ற உறுப்பினர்கள் ஜானகி. சாந்தாமணி, ரேவதி, ரம்யா, மணிமேகலை, சித்ரா, ரேகா, பாலசுப்ரமணியன், முருகானந்தம், மாடசாமி, துறை செந்தில்கு மார், அகில் சந்திரசேகரன், முருகேசன், கீர்த்தனா, நகர நிர்வாகிகள் செல்வி, வீரபாண்டி செயலாளர் சுரேஷ்குமார், சோமையம்பாளையம் ஆனந்தகுமார், விக்னேஷ்வரன், வக்கீல்கள் பிரபு, சசி, வழக்கறிஞர் சந்தானம், அப்பாஸ், ஐ.டி. உதயகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### சிவகங்கையில் சுதந்திரப் போராட்ட

# வீரப் போராளி குயிலி 244 ஆம் ஆண்டு நினைவு தினம்!

### அமைச்சர்கள் கே.ஆர் .பெரிய கருப்பன் - டாக்டர் மதிவேந்தன் மரியாதை!

சிவகங்கை, அக். 14 -

சிவகங்கையை தலைநகராக கொண்டு ஆட்சி புரிந்தவர் ராணி வீரமங்கை வேலு நாச்சியார். அவரது படையில் பணியாற்றிய வர் குயிலி. இவர் நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்காக ராணி வேலுநாச்சியாருடன் சேர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டார். நாட்டின் விடுதலைக் காக ஆங்கிலேயர்களின் நவீன ஆயுதக்கிடங்கினை தன் உடல் முழுவதும் எண்ணையினைஊற்றி தீ வைத்துக் கொண்டு ஆயுதக் கிடங்கை அழித்து ஆயுதக் கிடங்கில் குதித்து இறந்துபோனார்.

அவரது நினைவினை போற்றும் வகையில் நேற்று முன்தினம் (12ஆம் தேதி) சிவகங்கையில் ராணிவேலு நாச்சியார் நினைவுமண்டபத்தில் உள்ள வீரப் போராளி குயிலியின் திருவருவச் சிலைக்கு அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் டாக்டர் மதிவேந்தன் ஆகியோர் மாவட்ட தி.மு.க. சார்பில் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து திருமதி தமிழரசி ரவிக்குமார். எம்.எல்.ஏ. மாவட்ட திமுக துணை செயலாளர் த. சேங்கைமாறன், முன்னாள் எம்.எல்.ஏ. மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு இணைச்செயலாளர் எஸ். மாரியப்பன் கென்னடி, மாவட்ட ஆதிதிராவிடர் நல குழு தலைவர் கொத்தமங்கலம் சேது,அமைப்பாளர் சிங்கமுத்து, ஒன்றிய செயலாளர்கள் எம்.ஜெயராமன் யோக. கிருஷ்ணகுமார், வே.ஆரோக்கியசாமி, ஆர்.எம்.கென்னடி, ஒன்றிய துணைசெயலாளர் முத்துகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அமைப்பைச் சேர்ந்தவர்கள் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

பின்னர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

பருவநிலை காலங்களில் தக்காளி வெங்காயம் விலை உயர்வது வழக்கமான ஒன்றுதான். அதனால் மக்களுக்கு குறைவான விலையில் தக்காளி வெங்காயம் கிடைக்க வேண்டும் என்று முதல்வர் உத்தரவிட்டதன்பேரில் சென்னையில் பசுமை பண்ணையில் தக்காளி வெங்காயம் குறைவான விலைக்கு விற்கப் பட்டு வருகிறது. இது மக்களிடம் நல்ல வரவேற்பினைபெற்று உள்ளது.

தொடர்ந்து விலை குறையாமல் இருந்தால் மாவட்டம் முழுவதும் பசுமை பண்ணை மூலம் கூட்டுறவு துறை மூலம் வெங்காயம் தக்காளி விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டு வருகிறது. கூட்டுறவு சங்க தேர்தல் நடத்துவது குறித்து தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த அறிவிப்பு வந்ததும் கூட்டுறவு சங்க தேர்தல் நடைபெறும்.

இவ்வாறு அமைச்சர்கே ஆர். பெரியகருப்பன் கூறினார். ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஆதிதிராவிடர் நலத் துறை என்று ஒரு சமூகத்தின் பெயரால் அரசுத்துறை உள்ளதாக பொதுவாக கருதப்பட்டு வருகின்றது.

இதன் பெயரை மாற்றுவது குறித்து முதல்வர் பரிசிலித்து பெயர் மாற்றம் குறித்து நல்ல முடிவினை அறிவிப்பார். தாழ்த்தப்பட்டோர் பட்டியல் சமுகத்தினர் உட்பட அனைவரும் அரசின் சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது. இதை பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மதிவேந்தன் கூறினார்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசின்

# அலட்சியத்தின் உச்சமே ரயில் விபத்துகள்!

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

சென்னை,அக்.14-

ஒன்றிய பா.ஜ.க. அரசின் அலட்சியத்தால் ரயில்விபத்துகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று தினகரன் நாளேட்டின் நேற்றைய தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்து தினகரனின் தலையங்கம் வருமாறு:


தினகரன்
அக்டோபர் 13, 2024 ஞாயிற்றுக்கிழமை
அலட்சியத்தின் உச்சம்
கர்நாடக மாநிலம், மைசூருவில் இருந்து கடந்த 2 நாட்களுக்கு முன்பு புறப்பட்டது பாக்மதி எக்ஸ்பிரஸ் ரயில். 27 பெட்டிகளை கொண்ட இந்த ரயிலில் 1600பேர் பயணித்தனர். பெங்களூரு, காட்பாடி, பெரம்பூர், வியாசர்பாடி வழியாக ஆந்திரா நோக்கி இந்த ரயில் சென்றது. பொன்னேரி ரயில்நிலையம் அருகே வந்தபோது, நேர் பகுதியில் செல்வதற்கு இந்த ரயிலுக்கு சிக்னல் கொடுக்கப்பட்டுள்ளது.
இதனால், திருவள்ளூரை அடுத்த கவரப்பேட்டை ரயில்நிலையம் நோக்கி 120கிலோ மீட்டர் வேகத்தில் முதலாவது வழித்தடத்தில் பாக்மதி எக்ஸ்பிரஸ் வந்துள்ளது. கவரப்பேட்டைக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவில் வந்த எக்ஸ்பிரஸ் ரயில் டிரைவருக்கு லூப்லைன் என்று கூறப்படும் இரண்டாவது தடத்தில் செல்வதற்கு சிக்னல் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, டிரைவர் லூப்லைனில்

கர்நாடக மாநிலம், மைசூருவில் இருந்து கடந்த 2 நாட்களுக்கு முன்பு புறப்பட்டது பாக்மதி எக்ஸ்பிரஸ் ரயில், 27 பெட்டிகளை கொண்ட இந்த ரயிலில் 1600பேர் பயணித்தனர். பெங்களூரு, காட்பாடி, பெரம்பூர், வியாசர்பாடி வழியாக ஆந்திரா நோக்கி இந்த ரயில் சென்றது. பொன்னேரி ரயில்நிலையம் அருகே வந்த போது, நேர் பகுதியில் செல்வதற்கு இந்த ரயிலுக்கு சிக்னல் கொடுக்கப்பட்டுள்ளது.

இதனால்,திருவள்ளூரை அடுத்த கவரப் பேட்டை ரயில்நிலையம் நோக்கி 120கிலோ மீட்டர் வேகத்தில் முதலாவது வழித்தடத்தில் பாக்மதி எக்ஸ்பிரஸ் வந்துள்ளது. கவரப்பேட்டைக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவில் வந்த எக்ஸ்பிரஸ் ரயில் டிரைவருக்கு லூப் லைன் என்று கூறப்படும் இரண்டாவது தடத்தில் செல்வதற்கு சிக்னல் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, டிரைவர் லூப்லைனில் ரயிலை இயக்கியுள்ளார். அதே நேரத்தில் அதே தடத்தில் 75பெட்டிகளுடன் நின்று கொண்டிருந்த சரக்கு ரயிலின் பின்பகுதியில் பாக்மதி எக்ஸ்பிரஸ் ரயில் மோதியுள்ளது. இதில், ரயிலின் 13பெட்டி கள் தண்டவாளத்தில் இருந்து தடம் புரண்டது. 3பெட்டிகள் திடீரென தீப்பற்றி எரியத் தொடங்கியது. இதில் 13பேர் படுகாயமடைந்த நிலையில் தீவிர சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். மீட்பு பணிகள் துரித கதியில் நடந்து வருகிறது. இந்தியாவில் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் ரயில்வே துறையில் சமீபகாலமாக விபத்துக்கள் அதிகரித்து வருவது மக்கள் மத்தி யில் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. குறிப்பாக பாஜ ஆட்சிக்கு வந்த பிறகு நடந்த விபத்துகள் என்பது நாடு முழுவதும் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தி வருகிறது. 2010ம் ஆண்டு மே மாதம், மேற்கு வங்கத்தில் சரக்கு ரயிலும், விரைவு ரயிலும் மோதிக் கொண்ட விபத்தில் 148 பயணிகள் உயிரிழந்தனர் . 2023ம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஒடிசாவின் பாலசோர் மாவட் டத்தில் கோரமண்டல் விரைவு ரயில் விபத்தில் சிக்கியது. இதில் 20க்கும் மேற்பட்ட பெட்டிகள் தடம் புரண்டதில் 296 பேர் பலியாகினர். ஆயி ரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

நடப்பாண்டு (2024) ஜூன் மாதம் மேற்கு வங்கத்தின் டார்ஜிலிங் மாவட்டம் நியூஜல்பை குரி அருகே சரக்கு ரயிலும், விரைவு ரயிலும் மோதிக் கொண்டதில் 15பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். இதன்படி கடந்த 13ஆண்டுகளில் மட்டும் ரயில் விபத்தில் 459பேர் பலியாகி உள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உடல் உறுப்புகளை இழந்து நிர்க்கதியாக நிற்கின்றனர். ஒன்றிய ரயில்வே துறையில் 6நாட்களுக்கு ஒரு சாதாரண ரயில் விபத்து என்பது தொடர்கதையாகி வருகிறது. அவ்வப்போது கோர விபத்துக்களும் அரங்கேறி வருகிறது . கடந்த காலங்களில் இது போன்ற விபத்துகள்

நடந்தால் அந்த துறை அமைச்சர் அதற்குரிய பொறுப்பை ஏற்பார். அடுத்து இதுபோன்ற அபா யங்கள் நிகழாமல் இருப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும். ஆனால், தற்போதைய ஒன்றிய ரயில்வே துறை அலட்சியத்தின் உச்சத்தில் உள்ளது என்பதற்கு தொடரும் ரயில் விபத்துகள் பெரும் சாட்சியாக நிற்கிறது. ஒன் றிய அரசின் மெத்தனத்திற்கு அனைத்து அரசி யல்கட்சி தலைவர்களும் வேதனை தெரிவித் துள்ளனர். குறிப்பாக நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி, “பல விபத்துகளில் பல உயிர்கள் பலியாகி இருந்தாலும் ஒன்றிய அரசு பாடம் கற்கவில்லை. இந்த அரசு விழித்துக் கொள்ளும் முன்பு எத்தனை குடும்பங்கள் அழிக் கப்படுமோ?” என்று கேட்டிருப்பது ஒட்டு மொத்த மக்களின் கேள்வி என்றால் அது மிகையல்ல.

இவ்வாறு தினகரன் தலையங்கத்தில் குறிப்பிடப்ப ட்டுள்ளது

### சட்டமன்ற தொகுதிப் பார்வையாளர்கள் பங்கேற்கும்

# திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

**மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ அறிவிப்பு!**



திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் 15.10.2024 செவ்வாய் மாலை 5.00 மணியளவில் பூவிருந்தவல்லி ஹோட்டல் ஹைவே நிகழ்ச்சி அரங்கில் மாவட்ட அவைத் தலைவர் மா.இராஜி தலைமையில் நடைபெறுகிறது.

மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெரால்டு, பிரபு கஜேந்திரன், சி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் அதுசமயம் பூத் கமிட்டி அமைத்தல், வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் உள்ளிட்ட பணிகளை மேற்பார்வையிடுவதற்காக மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நியமனம் செய்யப்பட்டுள்ள தொகுதி பார்வையாளர்களான ஆவடி தொகுதிக்கு, மாநில விளையாட்டு அணி துணைச் செயலாளர் செல்வி நிவேதா ஜேசிகா, பூவிருந்தவல்லி தொகுதிக்கு மாநில தொழிலாளர் அணி செயலாளர் செல்வராஜ், ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். முன்னதாக ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ், திருமழிசை பேரூர் கழகச் செயலாளர் தி.வே.முனுசாமி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்

இக்கூட்டத்தில் மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள். கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள். தலைவர்கள் துணை தலைவர்கள் துணை அமைப்பாளர்கள். உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள். அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** 1. கழக இளைஞர் அணி செயலாளரும் **துணை முதல்வர்** அவர்களின் பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுதல்

2. 29.10.2024 அன்று வாக்காளர் பட்டியல் வெளியிட்டவுடன். வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணிகள் குறித்து.

3 கழக ஆக்கப் பணிகள்.

அமைச்சர் **ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், கூடுவாஞ்சேரி நகரக் கழகம் சார்பில், பேருந்து நிலையம் அருகில், முரசொலி செல்வம் அவர்களின் மறைவை ஒட்டி, அவரின் திருவுருவப் படத்திற்கு நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்றத் தலைவருமான எம்.கே.டி.கார்த்திக் தலைமையில் நகரக் கழகத்தினர் மாலை அணிவித்து, மலர் தூவி, அஞ்சலியுடன் வீரவணக்கம் செலுத்தினர். இதில் நகரக் கழக நிர்வாகிகள், வார்டுச் செயலாளர்கள், மன்ற உறுப்பினர்கள், அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னணியினர், செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.

# கருத்துச் சுதந்திரத்தைக் காத்தவர் முரசொலி செல்வம்!

### தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் இரங்கல்!

சென்னை, அக்.14-

தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் மாநில தலைவர் சகாயராஜ், பொதுச்செயலாளர் பிரதீப்குமார், பொருளாளர் ராம்ஜி விடுத்துள்ள இரங்கல் அறிக்கை வருமாறு:-

கடந்த 50 ஆண்டுகளாக முரசொலியை மேம்படுத்தி, சிலந்தியாக அரசியல் கட்டுரைகளை எழுதி, திராவிட இயக்க கொள்கைகளை பத்திரிகை வாயிலாக பட்டி தொட்டியெங்கும் பரப்பியவர்.

முரசொலிக்கு எதிரான அடக்குமுறைகளையும், வழக்குகளையும் துணிச்சலோடு எதிர்கொண்ட முரசொலி செல்வம், தனது கட்டுரைகளின் வாயிலாக மருத்துரிமையை காப்பாற்றியவர்.

கருத்துரிமையின் கழுத்தை நெரிக்கும் வகையில் சட்டமன்ற கூண்டில் ஏற்றப்பட்ட முரசொலி செல்வம், தனது கூர்மையான வாதத்தால் உதயசூரியனின் கதிராக ஒளிவீசி வெளிச்சத்துக்கு (வெளியில்) வந்தார்.

கூண்டு கண்டேன்,குரகலம் கொண்டேன் என்ற கலைஞரின் கடிதத்துக்கு முரசொலி வாயிலாக சாமரம் வீசியவர் முரசொலி செல்வம் என்றால் அது மிகையாகாது .

பத்திரிகையாளர்களுக்காக கட்டுரைகளை பல்வேறு பத்திரிகையாளராக தன்னை முன்னிறுத்தியவர்.

மூத்த பத்திரிகையாளர் முரசொலி செல்வத்தை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கும், முதல்வர் ஸ்டாலின், முரசொலி குழுவுக்கும் தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் இதயப்பூர்வமான ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.


# புவியில் நாளை - புகழில் நிலையாய் முரசொலி செல்வம்!

உள்ளத்தில் என்றும் நல்லெண்ணம் வளர்த்து
எண்ணத்தில் உயர்வை தானாய் சேர்த்து
முரசொலி பேரினை தன்னோடு சுமந்து
முழு நிலவாய் மனதிலும் குளிர்ந்து
பணியாளர்களை அன்பு கொண்டு அரவணைத்து
பண்புள்ளமுடன் எளிமையில் என்றும் வாழ்ந்து
கலைஞர் அய்யாவின் மருமகனாய் சிறந்து என்றும்
கட்டிக் காக்கும் முரசொலிதான் என்றும்
பத்திரிக்கை உலகில் தனித் தன்மை கொண்டு விளங்கி
பலரிடம் நேசமுடன் என்றும் பழகி
வாழ்ந்து பெருமை சேர்த்தார் இம்மண்ணிலே
இப்புவியில் நாளையும் வாழ்வார் புகழின் நிலையிலே

**முருக. சண்முகம்,**
துணைப் பதிவாளர் (ஓய்வு) கூட்டுறவுத் துறை

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**அம்பத்தூர் பா. இரவைக்கண்ணன்**
**அக்டோபர் 14 (1992)**



**அம்பத்தூர் நகரக் கழகத்தின் செயலாளராக பல ஆண்டுகள் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார். மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.**

**துணிவுமிக்க உள்ளம்! பணிவுமிக்க பண்பாடு! கொள்கையில் உறுதி! குறிக்கோளுக்காக தியாகம் செய்யும் இயல்பு! என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**